**MCOP No.43/2019**

**தேதி- 07.04.2021**

**ம.சா.1 ( சங்கீதா )**

**குறுக்கு விசாரணை-**

4ம் மனுதாரர் கோபால் என் மாமனார். 5ம் மனுதாரர் என் மாமியார். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து குறித்து புகாரை எங்கள் உறவினர் கமலநாதன் என்பவர் கொடுத்தார். என் கணவர் மிலிட்டரி கேண்டினில் பணிபுரிந்தார் என்பதற்கு பணி நியமன உத்தரவு தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது போல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் மாதம் ரூ.40,000/- சம்பாதித்து வந்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவரின் வயதை காண்பிக்க பிறப்புச் சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் வேகத்தடை இருந்தது என்றால் சரி. வேகத்தடை இருக்கும் இடத்தில் பேருந்து வேகமாக செல்ல வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. பேருந்து சென்றுக் கொண்டிருக்கும் போது என் கணவர் இறங்க முயற்சித்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. காவல் துறையினர் தயார் செய்த குற்ற அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆரணி நகர காவல் நிலையத்தில் புகாரை விசாரித்து வழக்கு பிழையுடையது என்று முடித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. ஓடும் பேருந்திலிருந்து என் கணவர் இறங்க முற்பட்டதல் விபத்து ஏற்பட்டது என்றாலும், பேருந்து ஓட்டுநரின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Petitioners / Respondents and admitted by the witness to be correct.

Sd./ S. Syed Barkathullah
Additional District Judge,
Fast Track Court, Arani.